**ஏப்ரல் – 28**

# TNPSC துளிகள்

- இந்திய விமானப்படையானது, "ஆக்ரமன்" எனப்படும் ஒரு பெரிய அளவிலான போர்ப் பயிற்சியினை நடத்தியதோடு இது மலைப் பகுதி மற்றும் தரைப்பகுதி சார்ந்த நிலப் பரப்புகளில் தாக்குதல் திறன்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.
- ஆதித்ய பிர்லா குழுமத்தின் தலைவர் குமார் மங்கலம் பிர்லா மதிப்புமிக்க 2024 ஆம் ஆண்டு லதா தீனநாத் மங்கேஷ்கர் விருதைப் பெற்றுள்ளார்.
- இந்தியாவின் உள்நாட்டு நீர்வழிகளில் 2014-15 ஆம் ஆண்டில் 18 மில்லியன் மெட்ரிக் டன்னாக இருந்த சரக்குப் போக்குவரத்தானது, 2024-25 ஆம் ஆண்டில் 145 மில்லியன் டன்களுக்கு மேல் பதிவாகியுள்ளதுடன் இந்தியா புதியச் சாதனையினைப் படைத்து உள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டு கொள்முதல் ஆண்டில் துவரை, உளுந்து மற்றும் மைசூர் பருப்பு ஆகியவற்றை மாநிலத்தின் முழு உற்பத்திக்கும் சமமான விலை ஆதரவுத் திட்டத்தின் (PSS) கீழ் கொள்முதல் செய்ய அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.
- புனேவில் உள்ள இந்தியத் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் (FTII) மற்றும் கொல்கத்தாவில் உள்ள சத்யஜித் ரே திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் (SRFTI) ஆகியவை கல்வி அமைச்சகத்தினால், தனித்துவமானப் பிரிவின் கீழ் நிகர்நிலை பல்கலைக் கழகங்களாகக் கருதப்படும் நிறுவனங்களாக அறிவிக்கப் பட்டுள்ளன.
- நாசாவில் பணியாற்றும் ஒரு மூத்த விண்வெளி வீரரான டான் பெட்டிட் (70), சர்வதேச விண்வெளி நிலையத்தில் (ISS) 220 நாட்களுக்கு மேல் தங்கி தற்போது பூமிக்குத் திரும்பி உள்ளார்.
- KIIT மற்றும் KISS ஆகிய நிறுவனங்களின் நிறுவனர் டாக்டர் அச்சுயுத சமந்தாவிற்கு 2025 ஆம் ஆண்டின் குருதேவ் காளிச்சரன் பிரம்மா விருது வழங்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## ‘மலரும் புன்னகை’ திட்டம்




- பள்ளிக் குழந்தைகளிடையே துருத்திக் கொண்டிருக்கும் பல்வரிசையமைப்பு அல்லது மேல்கீழ் பல் அமைப்பு பொருந்தாமையைச் சரி செய்வதற்காக விருதுநகர் மாவட்ட நிர்வாகமானது புதுமையான முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது.

- இராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்த்ய காரியக்ரம் நடத்திய சுகாதார முகாம்கள் மூலம் சுமார் 568 மாணவர்கள் துருத்திக் கொண்டிருக்கும் பல்வரிசையமைப்பினைக் கொண்டு இருப்பதாக மாவட்ட நிர்வாகம் கண்டறிந்துள்ளது.
- இதற்கானச் சிகிச்சை அழகியல் சிகிச்சையாக வகைப்படுத்தப் பட்டுள்ளதால், இந்தச் சிகிச்சைக்கான செலவினை எந்தவொருச் சுகாதாரத் திட்டமும் அல்லது காப்பீட்டுத் திட்டமும் உள்ளடக்கியிருக்கவில்லை.
- எனவே, அந்த மாவட்ட ஆட்சியர் மலரும் புன்னகை என்ற புதிய திட்டத்தை அறிமுகப் படுத்தினார்.
- பல் சீரமைப்புக் கம்பிகளை (பிரேஸ்களை) பொருத்துவதற்காக, 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து குழந்தைகள் பல்வேறு சிறு சிறு குழுக்களாகத் தனியார் பல் மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

# தேசியச் செய்திகள்

## தி பாரத் திட்டம் 2025




- மத்திய அரசானது, யுவர்ஸ்டோரி நிறுவனத்தின் மூலம் பாரத் திட்டம் எனும் தேசிய முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- இது இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை மற்றும் கிராமப்புற இந்தியாவைச் சேர்ந்த 1 மில்லியன் தொழில்முனைவோருக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த ஒரு முன்னெடுப்பானது அரசு, சுற்றுச்சூழல் அமைப்பு மேம்பாட்டு அமைப்புகள், படைப்பாளிகள் மற்றும் சமூகங்களை ஒருங்கிணைக்கிறது.
- இது அடிமட்டத் திறனை வெளிக் கொணரவும், தொழில்முனைவுச் செயற்கருவிகள், கல்வி மற்றும் நிதியுதவி ஆகியவற்றினை அனைவரும் எளிதாக அணுகவும் உதவும்.

## AI கிரண்

- இது இந்திய அரசாங்கத்தின் முதன்மை அறிவியல் ஆலோசகர் (PSA) அலுவலகத்தின் தலைமையில், வெரிக்ஸ் மற்றும் INK உமேன் ஆகியவற்றின் ஒரு மிக முன்னோடி மிக்க முன்னெடுப்பாகும்.
- இந்தச் சிறப்பு நோக்கம் சார்ந்த தளமானது செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக்

கற்றலில் முன்னணியில் உள்ள நாட்டின் பெண்களைக் கொண்டாடச் செய்வதோடு, அவர்களை தரம் உயர்த்தி, அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.

- இளநிலை மட்டத்தில் GenAI பிரிவுப் பணிகளில் பெண்களின் பங்கு 33 சதவீதமாக மட்டுமே உள்ளது என்பதோடு உயர்நிலையில் இந்த எண்ணிக்கை 19 சதவீதமாகக் குறைகிறது.
- இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு (AI) சந்தையானது, 2027 ஆம் ஆண்டிற்குள் 17 பில்லியன் டாலரை எட்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இது 2035 ஆம் ஆண்டிற்குள் தேசியப் பொருளாதாரத்திற்கு 1 டிரில்லியன் டாலர் வரை பங்களிக்கக் கூடும்.




## சர்வதேசச் செய்திகள்

### உலகின் முதல் 10G அகலப்பட்டை சேவை வலையமைப்பு





- சீனா உலகின் முதல் வணிக ரீதியான 10-ஜிகாபைட் (10G) அகலப்பட்டை சேவை வலை

அமைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.

- இதன் நிகழ் உலகச் சோதனைகளானது, வினாடிக்கு சுமார் 9,834 மெகாபைட்கள் (Mbps) வரையான பதிவிறக்க வேகம், 1,008 Mbps என்ற பதிவேற்ற வேகம் மற்றும் தேடுதலில் தாமதம் 3 மில்லி வினாடிகள் வரை என்ற அளவுகளில் பதிவாகின.
- தென் கொரியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் கத்தார் போன்ற நாடுகள் மேம்பட்ட அகலப்பட்டை சேவை அமைப்புகளைப் பயன்படுத்தியுள்ளன.
- ஆனால் மேற்கூறிய எதுவும் இன்னும் பொதுப் பயன்பாட்டிற்காக என நேரடியான 10G சேவைகளை அறிவிக்கவில்லை.

# பொருளாதாரச் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டில் தங்கத்தின் விலை உயர்வு




- தங்கத்தின் விலையானது முதல் முறையாக 10 கிராமுக்கு 1 லட்சம் ரூபாயைத் தாண்டி உயர்ந்து வருகிறது.
- அமெரிக்க நாட்டின் அதிபர் அங்குள்ள பெடரல் வங்கியின் கையிருப்புகளை மாற்றி அமைக்கும் திட்டங்களை வெளியிட்ட பிறகு சர்வதேச விலைகள் உயர்ந்தன.
- இந்தியாவில் தங்கத்தின் விலைகள் பொதுவாக சர்வதேச விலைகளைப் பெருமளவில் பின்பற்றுகின்றன.
- அமெரிக்க டாலர் சரிந்த போதும், உலகளாவியத் தங்கத்தின் விலைகள் தொடர்ந்து உயர்ந்து, விலைகள் அவுன்ஸ் ஒன்றுக்கு 3,400 டாலரைத் தாண்டியுள்ளன.
- 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் தங்கம் சுமார் 59 சதவீதம் உயர்ந்துள்ளது.
- டாலர் பலவீனமடைவது என்பது, வெளிநாட்டு நாணயங்களை வைத்திருக்கும் பல முதலீட்டாளர்களுக்குத் தங்கத்தினை மிகவும் மலிவு விலையிலானதாக மாற்றுவதால் அது தங்கத்திற்கான தேவையை அதிகரிக்கிறது.
- சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியாவானது உலகின் இரண்டாவது பெரியத் தங்கச் சந்தையாக உள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் 761 டன்னாக இருந்த தங்கத்தின் தேவையானது, 2024 ஆம் ஆண்டில் 802.8 டன்னாக இருந்தது.

- நூறு ஆண்டுகளுக்கு முன்பு, குறிப்பாக 1925 ஆம் ஆண்டில், ஒரு அமெரிக்க டாலருக்கு இணையான தங்க ஈடு மாற்று விகிதம் 3.31 ரூபாயாகவும், பத்து கிராம் அளவிலான 24 காரட் தங்கம் 18.75 ரூபாயாகவும் விற்கப் பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## விண்வெளி நிலையத்தில் நீர் கரடிகள்



- சுபன்ஷு சுக்லா எனும் விண்வெளி வீரர் ஆக்சியம்-4 என்ற விண்வெளிப் பயணத்தை மேற்கொள்ளத் தயாராக உள்ளதையடுத்து, சர்வதேச விண்வெளி நிலையத்தின் பல சோதனைகளில் ஈடுபட இஸ்ரோ தயாராக உள்ளது.
- சுக்லா, ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலத்தினைச் சர்வதேச விண்வெளி நிலையம் வரையில் இயக்கி, விண்வெளி நிலையத்தில் வசிக்கும் மற்றும் பணிபுரியும் முதல் இந்தியராக மாற உள்ளார்.
- அவர் அங்கு தங்கியிருக்கும் காலக் கட்டத்தில் பல்வேறு சோதனைகளை மேற்கொள்ள உள்ளார் என்ற நிலையில் அவற்றில் மிக முக்கியமான ஒன்று வாயேஜர் நீர்க்கரடிகள் (டார்டிகிரேட்ஸ்) பரிசோதனையாகும்.
- இந்தச் சோதனைகள் ஆனது சர்வதேச விண்வெளி நிலையத்தில் நீர்க் கரடிகளின் உயிர்ப்பிப்பு, உயிர்வாழ்வு மற்றும் இனப்பெருக்கம் ஆகியவற்றை ஆராய உள்ளது.
- நீர்க் கரடிகள் அல்லது பாசி பன்றிக் குட்டிகள் என்றும் வெகுவாக அழைக்கப்படும் டார்டிகிரேடுகள் நம்ப முடியாத ஒரு சூழலில் உயிர்வாழும் திறன்களைக் கொண்டதாக அறியப்படும் சிறிய, நீரில் வாழும் நுண்ணிய விலங்குகள் ஆகும்.
- இந்த உயிரினங்கள் ஆனது, பொதுவாக 0.3 மில்லிமீட்டர் முதல் 0.5 மில்லி மீட்டர் வரை நீளம் கொண்டது என்பதால் அவற்றைப் பார்க்க நுண்ணோக்கி அவசியமாகும்.
- டார்டிகிரேடுகள் பூமியில் சுமார் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றன என்பதோடு அவை பாசிகள், பாசிக் காளான் (லைகன்கள்), மண், இலை மக்குக் குப்பைகள், நன்னீர், கடல் சூழல்கள், உயரமான மலைகள், ஆழ்கடல்கள், வெப்ப நீரூற்றுகள் மற்றும் துருவப் பனிக்கட்டி உள்ளிட்டவற்றிலும் கூட காணப்படுகின்றன.


# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலகப் பவளப்பாறை வெளிர்தல் நெருக்கடி 2025

- உலகின் மிகவும் மோசமான உலகளாவியப் பவளப்பாறை வெளிர்தல் நிகழ்வு ஆனது

தற்போது உலகின் பவளப் பாறைகளில் சுமார் 84 சதவீதத்தினைப் பாதித்துள்ளது.

- குறைந்தது சுமார் 83 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் பெருமளவிலான பவளப்பாறை வெளிர்தல் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- தற்போது ஏற்பட்டு வரும் உலகளாவியப் பவளப்பாறை வெளிர்தல் நிகழ்வு ஆனது இன்று வரை பதிவானதில் மிகப்பெரியதாகும்.
- முந்தைய ஒரு மாபெரும் வெளிர்தல் நிகழ்வானது 2014-2017 ஆம் ஆண்டு வரையில் பதிவான 3வது உலகளாவியப் பவளப்பாறை வெளிர்தல் நிகழ்வாகும்.
- இந்த நிகழ்வின் போது, உலகின் பவளப்பாறை பகுதியில் சுமார் 68.2 சதவீதம் ஆனது வெளிர்தல் நிலை எட்டும் வகையிலான வெப்பத் தாக்கத்தினை எதிர்கொண்டன.
- முதலாவது மற்றும் இரண்டாவது உலகளாவியப் பவளப்பாறை வெளிர்தல் நிகழ்வுகள் முறையே 1998 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்தன.
- ஆஸ்திரேலியாவின் பவளப் பாறைகள் 1998, 2002, 2016, 2017, 2020, 2022 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் பெருமளவிலான பவளப் பாறை வெளிர்தலால் பாதிக்கப் பட்டன.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## டைம்ஸ் இதழின் ஆசிய உயர் கல்வி தரவரிசை 2025





| Rank 2025 | Rank 2024 | Institution | Country/ region |
|---|---|---|---|
| 1 | 1 | Tsinghua University | China |
| 2 | 2 | Peking University | China |
| 3 | 3 | National University of Singapore | Singapore |
| 4 | 4 | Nanyang Technological University, Singapore | Singapore |
| 5 | 5 | The University of Tokyo | Japan |
| 6 | 6 | University of Hong Kong | Hong Kong |
| 7 | 8 | Fudan University | China |
| 8 | 9 | Zhejiang University | China |
| 9 | 10 | The Chinese University of Hong Kong | Hong Kong |
| 10 | 7 | Shanghai Jiao Tong University | China |

- சிங்குவா பல்கலைக்கழகம் மற்றும் பீக்கிங் பல்கலைக்கழகம் ஆகியவை முறையே முதல் மற்றும் இரண்டாவது இடங்களைப் பிடித்ததுடன், இந்தத் தரவரிசையில் சீனா

முதலிடத்தினைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

- முதல் 10 இடங்களில் இடம் பெற்றுள்ள ஐந்து நிறுவனங்கள் சீனாவைச் சேர்ந்தவை ஆகும்.
- சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் ஆனது மூன்றாவது இடத்தைப் பிடித்தது.
- இந்த ஆண்டிற்கானத் தரவரிசையில் 35 நாடுகள் மற்றும் பிரதேசங்களைச் சேர்ந்த 853 பல்கலைக் கழகங்கள் இடம் பெற்றுள்ளன.
- இந்தத் தரவரிசையில் உஸ்பெகிஸ்தான், பஹ்ரைன், மங்கோலியா மற்றும் சிரியா ஆகிய நான்கு நாடுகள் முதல் முறையாக இடம் பெற்றுள்ளன.
- இந்தியாவிலிருந்து, இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் (IISc) 38வது இடத்தைப் பிடித்து, இப்பட்டியலில் முன்னணி இடத்தில் உள்ள இந்திய நிறுவனமாகத் தொடர்கிறது.
- 111வது இடத்தைப் பிடித்த அண்ணா பல்கலைக்கழகம் இப்பட்டியலில் இடம் பெற்று உள்ள இரண்டாவது முன்னணி இந்திய நிறுவனம் ஆகும்.
- சவீதா மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவியல் கல்வி நிறுவனம் 149வது இடத்தில் உள்ளது.

## இணையவெளிக் குற்றம் குறித்த UNODC அறிக்கை 2025




- கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் காணப்படும் பன்னாட்டு ஒழுங்கமைக்கப் பட்ட குற்றக் குழுக்கள் தங்கள் இலாபகரமான மோசடி நடவடிக்கைகளை உலகம் முழுவதும் பரப்பி வருகின்றன.
- பல ஆண்டுகளாக, தென்கிழக்கு ஆசியாவில், மிக குறிப்பாக கம்போடியா, லாவோஸ் மற்றும் மியான்மர் நாட்டின் எல்லைப் பகுதிகளிலும், பிலிப்பைன்ஸிலும் மோசடி நடவடிக்கைகள் பெருகி வருகின்றன.
- நூற்றுக்கணக்கானத் தொழில்துறை அளவிலான மோசடி மையங்கள் ஆண்டிற்கு 40 பில்லியன் டாலருக்கும் சற்றே குறைவான இலாபத்தை ஈட்டுவதாக UNODC அமைப்பு மதிப்பிடுகிறது.

# மாநிலச் செய்திகள்

## ஒடிசாவின் சிமிலிபால் – தேசியப் பூங்கா அந்தஸ்து

- சிமிலிபால் தெற்கு மற்றும் சிமிலிபால் வடக்கு பிரிவுகளின் 11 சரகங்களில் பரவியுள்ள

சுமார் 845.70 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு ஆனது தேசியப் பூங்காவாக அறிவிக்கப் பட்டுள்ளது.

- பிதர்கனிகாவிற்கு அடுத்தபடியாக இம்மாநிலத்தில் தேசியப் பூங்காவாக அறிவிக்கப் பட்ட இரண்டாவது பாதுகாக்கப்பட்டப் பகுதியாக சிமிலிபால் திகழ்கிறது.
- இது இந்தியாவின் 107வது தேசியப் பூங்காவாகும்.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### XPRIZE கார்பனகற்ற போட்டி




- Mati Carbon எனப் படுகின்ற இந்தியாவின் ஒரு பருவநிலை முன்னெடுப்பானது, XPRIZE கார்பனகற்ற போட்டியில் 50 மில்லியன் டாலர் மதிப்பிலான பெரும் பரிசைப் பெற்று உள்ளது.
- அது 112 நாடுகளைச் சேர்ந்த 1,300க்கும் மேற்பட்ட அணிகளை விஞ்சியுள்ளது.
- Mati Carbon ஆனது, கார்பன் டை ஆக்சைடை ($CO_2$) பற்றி, சிறு விவசாயிகளுக்கு பயிர் விளைச்சலை அதிகரிக்கின்ற ஒரு மிக மேம்படுத்தப்பட்டப் பாறை உடைப்பு (ERW) மாதிரியைப் பயன்படுத்துகிறது.
- இது சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தாக்கத்தின் ஒரு அரிய கூட்டியக்கத்தினை வழங்கச்

செய்கிறது.

❖ Mati இந்தியா, தான்சானியா மற்றும் சாம்பியா ஆகிய நாடுகளில் நன்கு செயல்பட்டு வருகிறது என்பதோடு மேலும் 2022 ஆம் ஆண்டிலிருந்து சுமார் 16,000க்கும் மேற்பட்ட விவசாயிகளுடன் கைகோர்த்துள்ளது.

## சிறப்புப் பிரிவு தேசியப் பஞ்சாயத்து விருதுகள்-2025

❖ பீகாரில் நடைபெற்ற தேசியப் பஞ்சாயத்து ராஜ் தின கொண்டாட்டத்தின் போது 2025 ஆம் ஆண்டு சிறப்புப் பிரிவு தேசியப் பஞ்சாயத்து விருதுகள் வழங்கப்பட்டன.

❖ பின்வரும் சிறப்புப் பிரிவு தேசியப் பஞ்சாயத்து விருதுகள் அறிமுகப் படுத்தப் பட்டு உள்ளன.

  - பருவநிலை நடவடிக்கைக்கான சிறப்புப் பஞ்சாயத்து விருது (CASPA)
  - ஆத்ம நிர்பர் பஞ்சாயத்து சிறப்பு விருது (ANPSA)
  - பஞ்சாயத்து சம்த நிர்மான் சர்வோத்தம் சன்ஸ்தான் புரஸ்கார் (PKNSSP)

❖ பீகார் (மோதிபூர் கிராமப் பஞ்சாயத்து), மகாராஷ்டிரா (தவ்வா S கிராமப் பஞ்சாயத்து) மற்றும் ஒடிசா (ஹத்பத்ரா கிராமப் பஞ்சாயத்து) ஆகிய விருது பெற்ற 6 கிராமப் பஞ்சாயத்துகளில் 3 மகளிரால் தலைமை தாங்கப் படுகின்றன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

**(National Panchayat Awards 2025)**

| Sl.No. | Special Category Award | Rank | Gram Panchayat / Institution | State | LGD Code of Gram Panchayat |
|---|---|---|---|---|---|
| 1 | Climate Action Special Panchayat Award (CASPA) | 1 | Dawwa S Gram Panchayat (Block Sadak Arjuni, District Gondia) | Maharashtra | 175545 |
| | | 2 | Biradahalli Gram Panchayat (Block Sakaleshpur, District Hassan) | Karnataka | 218437 |
| | | 3 | Mothipur Gram Panchayat (Block Rosera, District Samastipur) | Bihar | 100332 |
| 2 | Atma Nirbhar Panchayat Special Award (ANPSA) | 1 | Mall Gram Panchayat (Block Yacharam, District Rangareddi) | Telangana | 210571 |
| | | 2 | Hatbadra Gram Panchayat (Block Kusumi, District Mayurbhanj) | Odisha | 120264 |
| | | 3 | Gollapudi Gram Panchayat (Block Vijayawada Rural, District Krishna) | Andhra Pradesh | 203825 |
| 3 | Panchayat Kshamta Nirmaan Sarvottam Sansthan Puraskar (PKNSSP) | 1 | Kerala Institute of Local Administration | Kerala | NA |
| | | 2 | State Institute for Rural Development and Panchayati Raj | Odisha | NA |
| | | 3 | State Institute of Panchayat and Rural Development | Assam | NA |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★